O.S.No.14/2020

வா.சா.1, திருமதி.சபீனாபேகம்
நாள் : 28.01.2026 நேரம் : 11.30 AM

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

1)எனது பிராதில் 2 வது பத்தியில் தாவா சொத்து வாணித்துரை மகன் முருகவேலுக்கு தந்தை வழி பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாணித்துரைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் உள்ளது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. மேற்படி வாணித்துரைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபணம் செய்தால் தான் எனது தாயார் வாங்கிய கிரயம் செல்லும் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தாயார் வாங்கிய கிரயமான வா.சா.ஆ.1 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வராத ஆவணம் என்றால் சரியல்ல.

2)வா.சா.ஆ.1 ஆவணம் பாத்திய அனுபவம் இல்லாதவர்களால் ஏற்படுத்தப்பட்டதால் அதன் அடிப்படையில் எனது தாயார் எனக்கு ஏற்படுத்தி கொடுத்த வா.சா.ஆ.2 ஆவணமான செட்டில்மென்ட் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி எதிர்வழக்குரையில் 4 வது பக்கத்தில் மேலிருந்து 8 வது வரியில் வாணித்துரையின் தகப்பனார் பெயர் கருப்பையாபிள்ளை என்றால் சரிதான். மேற்படி கருப்பையாபிள்ளை 27.10.1948 ம் தேதி வாணித்துரையை மைனராக காண்பித்து 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் செல்லையாபிள்ளைக்கு ஆவண எண். 4202/1948 ல் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3)மேற்படி தாவா சொத்து வாங்கும் போது வில்லங்க சான்று எடுத்து சரிபார்த்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழ் சரிபார்த்து தான் வாங்கினேன். மேற்படி வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்க்கவில்லை என்றாலும், தாவா சொத்து மோசடியாக கிரயம் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. செல்லையாதேவர் கிரயம் பெற்று பாத்திய அனுபவம் செய்து தற்போது 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபணம் செய்ய என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். தற்போது எனக்கு சொல்ல தெரியவில்லை.

4)நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணமான வில்லங்க சான்றிதழ் மோசடியாக வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் நான் முருகவேலிடமிருந்து பெற்ற கிரயம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி முருகவேல் வட்டாட்சியராக உள்ளார் என்றால் சரிதான். மேற்படி முருகவேல் அதிகார துஷ்பிரயோகத்தை பயன்படுத்தி பிரதிவாதிக்கு பாத்திய அனுபவமான சொத்தை மோசடியாக எனக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை முருகவேலோ, நானோ எந்த காலத்திலும் அனுபவம் செய்தததில்லை என்றால் சரியல்ல. வாணித்துரையின் உடன் பிறந்த சகோதரர்கள் தான் பழனிக்குமார்பிள்ளை, நாகரத்தினம்பிள்ளை என்றால் சரிதான். மேற்படி இருவரும் தனது பிள்ளைகளை மைனர்களாக காண்பித்து 14.10.1970ல் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு தாவா சொத்தின் மற்றொரு பகுதியை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், எனது தாயாருக்கும் மேற்படி விபரம் நன்கு தெரிந்திருந்தும் மோசடியாக தாவா

சொத்தை கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி தனது டிராக்டர், வீடு கட்டுமான பொருட்கள் மற்றும் உழவடை சாதனங்களை வைத்திருந்ததற்கு நான் காவல் துறையில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். காவல் துறையினர் விசாரித்துவிட்டு பூர்வீக அடிப்படையில் முருகவேலுக்கு பாத்தியம் இல்லை என்று சொல்லி நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காண கூறினார்கள் என்றால் சரியல்ல.

5)நான் மற்றும் எனது தாயார் பெற்ற ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எனது தாயார் தாவா சொத்தில் எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )**

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.55 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.01.28 10:16:06 +0530